925

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 13] 1919-ஞு மே & ஜூன்மீ [நெ. 5 & 6.

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A., and Mr. A. Subramania Iyer, B.A.

Annual Subscription is One Rupee. Post Free.

பாலூர் விவசாயப்பண்ணையில் பயிரிடும் சம்பாநெல் தினுசுகளில் இராமகெருடன் சம்பாவைக் குறித்த குறிப்பு.

ராமகெருடன் சம்பா வென்னும் நெல்தினுசு கெருடன் சம்பாவேயல்லாமல் வேறல்ல. இக்கெருடன் சம்பாநெல் தென் ஆற்காடு ஜில்லாவில் விழுப்புரம், திண்டிவனம், கூடலூர், சிதம்பரம், முதலிய தாலூகாக்களில் ஜாஸ்தியாய் கிருஷிகர் பயிரிடுகிறார்கள். இவ்விராஜதானியின் தென் ஜில்லாக்களிலுள்ள கிருஷிகர் பக்ஷிகளுள் கெருடனை எவ்விதம் ராஜாவென்றும், அது ஒருகாலத்தில் விஷ்ணுவின் அவதாரங்களில் வாகனமாய் உபயோகப்பட்டதென்ற காரணத்தை யொட்டி அது பக்ஷிகளில் மிகச்சிறந்த பக்ஷியென்று மதிக்கிறார்களோ அவ்விதம் கெருடன் சம்பா நெல்லை, நெல் தினுசுகளுக்குள் ராஜாவென்றும், மிகசிலாக்கியமான தினுசுயென்றும் அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள்.

2. 1911-ம் வருஷத்தில் பாலூர் விவசாயப்பண்ணையில் பயிர்செய்திருந்த கெருடன் சம்பா நெல்பயிரில் சில மூடுகளை (செடிகளை) இங்குமங்கும் யாதொரு கவனம் செலுத்தாமல் எடுத்து, ஒவ்வொரு மூடுகளையும் தனியாய்வைத்து அவைகளில் சேகரித்த நெல்லையும் வெவ்வேறே வைத்திருந்தார்கள். அடுத்த வருஷம் சம்பா சாகுபடிசெய்யும் தருணத்தில் முன்வருஷத்தில் வெவ்வேறாய் வைத்திருந்த நெல்லை ஒரு வயலில் பாத்திகளில் நாற்றுவிட்டு, நடும் வயதில் அவைகளை வெவ்வேறு பாத்திகளில் நட்டார்கள். இவைகள் வளர்ந்து கதிராயிருக்கும் சமயத்தில் வெவ்வேறு வெவ்வேறாய் தனித்தனிப் பாத்திகளில் பயிராயிருக்கும் மூடுகளில் கதிர்களில் நீட்டத்திலும், மணிப்பிடியிலும், மற்ற குணங்களிலும்—வித்தியாசங்களும் ஏற்றத்தாழ்வுகளுங் காட்டுகிறதாவென்று பரிக்ஷித்தார்கள். இப்படிப் பரீக்ஷைசெய்ததில் ஒரு மூடு நன்றாய் கிளைத்து ஓங்கிவளர்ந்து ஜாஸ்தி கதிர்கள் வாங்கி ஒரே தருணத்தில் பழுத்திருக்கிறதென்று தெரிந்தது. அம்மூட்டின் கதிர்களிலிருந்த நெல்லை விதைக்காக வைத்து 1912-13-ம் வருஷத்தில் அதை தனியாய் நாற்றுப்பாவி, அந்த நாற்றை ஒரு சிறு தனிவயலில் நட்டார்கள். இந்தப் பயிர் நன்றாய் கிளைத்து வீரியமாய் வளர்ந்து ஒரே ராசியாய் நீளமான குலைகளையும் நெருங்கிய மணிகளுள்ள கதிர்களையும் தந்தது. இதை கண்டுமுதல் செய்தபோது ஏகர் ஒன்றுக்கு 3,210 ராத்தல் மாசூல் கிடைத்தது (1 பட்டணம்படி நெல் சுமார் 2⅝ ராத்தல் என்று சராசரியில் வைத்துக்கொள்ளலாம்.) அந்தக் காலத்தில் பாலூர் விவசாயப்

பண்ணை தென் இலாகாவைச் சேர்ந்திருந்தது. அப்போதை தென் இலாகா விவசாய டிப்டி டைரெக்டர் அவர்களாகிய மிஸ்டர் எச். சி. சாம்சன் என்பவர் இப்படிப் பொருக்கியெடுத்த கெருடன்சம்பா நெல் தினுசுக்கு 'இராமகெருடன் சம்பா' வென்று பெயரிட்டார். இந்த தினுசுக்கு ராம கெருடன் சம்பாவென்று பெயர் வைத்ததற்கு சில காரணங்களுண்டு. இந்தப் பொருக்கி எடுத்த நெல் சாதாரணமாய் எல்லா ஜில்லாக்களிலும் பயிராகிறதாலும், மிகச் சிறந்ததென்று எண்ணப்பட்ட கருடன் சம்பாவிலிருந்து பொருக்கினதாகையாலும், அந்த நெல்லைவிட இந்தப் பொருக்கியெடுத்த தினுசு நெல்லின் குணகுணங்கள் அநேக விஷயங்களில் சிலாக்கியகரமாயிருந்ததாலும், இந்துக்கள் எல்லாரும் அநேகமாய் ஸ்ரீராமரை பூஜைசெய்து கொண்டாடுகிறவர்களாகையாலும் "ராமர்" என்ற சுவாமியின் நாமத்தை கருடன் சம்பா நெல் என்பதற்கு முந்திக் கூட்டி "ராமகெருடன் சம்பா" என்று பெயரிட்டார். இத்துடன் இந்த தினுசை மிஸ்டர் எச். சி. சாம்சன் டிப்டி டைரெக்டராயிருக்கும் போது, அவர் உத்திரவின்பிரகாரம் மற்ற கெருடன் சம்பா பயிர்களிலிருந்து பொருக்கியெடுத்ததும், அவ்விஷயத்தில் மேலதிகாரியின் உத்திரவுப் பிரகாரம் வேலைசெய்துவந்த அஸிஸ்டெண்டு பாரமானேஜரின் பெயர், கே. இராமனுதய்யர் மேலதிகாரிகளின் உத்திரவை தவறாமல் நடத்தி இந்ததினுசை விருத்திக்குக்கொண்டுவந்த கீழ் உத்தியோகஸ்தராகிய கே. இராமனுத ஐயர் அவர்களுடைய பெயரில முன்பாதியாகிய "இராம" வென்ற பெயரையும் கெருடன் சம்பா நெல்லுக்கு முன் கூட்டி "ராம கெருடன் சம்பா" வென்று ஞாபகார்த்தத்திற்காக வைத்து மிருக்கலாம். 1913-14-ம் வருஷத்தில் இந்த இராமகெருடன் சம்பா நெல் பாலூர் விவசாயப்பண்ணையில் ஜாஸ்தி விஸ்தீர்ணத்தில் பயிரிட்டுப் பார்த்ததில் கருடன் சம்பாதினுசைவிட ஜாஸ்தி மகசூலைக் கொடுத்ததுமல்லாமல் சிலாக்கியமான தானியத்தையும் தந்தது. இந்த இராமகெருடன் சம்பா, கெருடன் சம்பாவைவிடச் சிறந்ததென்ற விஷயங்களில் சிலவற்றை இதனடியில் குறித்திருக்கிறது:—

(i) ராமகெருடன் சம்பா ஒரே ராசியாய் வளர்ந்து குலைவாங்கி ஏககாலத்தில் பழுக்கும் குணத்தை உடையது. பயிர்கள் முன்னும் பின்னுமாய் கதிர்வாங்கிப் பழுத்தால், முன் கூட்டிப்பழுத்த குலைகளிலிருக்கும் தானியங்கள் கீழே உதிர்ந்துபோகும். பழுக்காத குலைகளில் தானியம் சரியானபடி முற்றாதபடி பதராய்ப்போகவு மிடமுண்டாகும். இத்துற்குணங்கள் ஏககாலத்தில் பழுக்கும் பயிரில் இருக்கமாட்டாது.

(ii) பயிர் ஒரே ராசியாய் வளர்ந்து குலைகளெல்லாம் ஏக காலத்தில் பழுப்பதால் அப்பேர்ப்பட்ட பயிர் மற்றப்பயிர்களைவிட 15 நாள்களுக்கு முன்னதாகவே அறுவடைசெய்யலாம்.

(iii) 15நாளைக்கு முன்கூட்டி அருவடைசெய்வதால் ஒன்றிரண்டு தண்ணீர்ப் பாய்ச்சலும் குறைகிறது. இப்படி ஒன்றிரண்டு தண்ணீர்ப் பாய்ச்சல் குறைவது தண்ணீர் தட்டுள்ள சந்தர்ப்பங்களில் ரொம்ப அனுகூலத்தை உண்டாக்கும்.

(iv) முன்கூட்டி பயிர் அறுவடைக்கு வருவதால் பயிர் அருவடை செய்வதற்கு கூலியாட்கள் கஷ்டம் ஜாஸ்தியாயிருக்கமாட்டாது.

(v) ஒருபோக நஞ்சை நிலங்களில் பயிர் முன் கூட்டி 15 நாளைக்கு முன்னதாகவே அருக்கலாயக்காகும்போது, பின் கூட்டி அருவடையாகும்

நிலங்களில் ஈரம் காய்ந்து போவதைப்போல் [illegible] காயாததாகையால் பசுந்தாள் உரப்பயிர்களை விதைத்தால் அவ்விதைகள் தப்பாமல் முளைக்க போதுமான ஈரம் கிடைக்கக்கூடும்.

(vi) முன்னும் பின்னுமாய் கதிர்வாங்கி எல்லா கதிர்களும் பழுக்கும் வரை பயிரை அறுவடை செய்யாமல் நிறுத்திவைப்பதில் சில பழுத்த பயிர்கள் கீழே சாய்ந்து, அதிலிருக்கும் நெல் உதிர்ந்து எலி முதலானவைகளால் நஷ்டமுண்டாகும் கெடுதிகள் ஏககாலத்தில் பயிர் கதிர்வாங்கி குலைகள் பழுத்து முன் கட்டி அறுவடையாகும் சந்தர்ப்பங்களில் அவ்வளவாய் இருக்காதாகையால் அப்போர்ப்பட்ட பயிர்களிலிருந்து கிடைக்கும் மாசூலும் ஜாஸ்தியாய்க்கிடைக்கும்.

(vii) இராமகெருடன் சம்பா நெல்லைக்குத்தி அரிசி எவ்வளவு கிடைக்கிறதென்று பரீக்ஷை செய்ததில் கருடன் சம்பாவைவிட 100க்கு 2 முதல் 3 படி ஜாஸ்தி கிடைக்கிறதாகத் தெரிகிறது.

(viii) இராமகெருடன் சம்பா அரிசியில் சமைத்தசாதம், கெருடன் சம்பா அரிசி சாதத்தைவிட சற்று வாய்க்கு மிருதுவாயும் ருசிகரமாயுமிருக்கிறதாக பரீக்ஷை செய்தவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

3. இதனடியில் குறித்த ஸ்டேட்டுமெண்டு நெல்லிக்குப்பத்திற் கடுத்த பாலூர் விவசாயப் பண்ணையில் சிலவருஷங்களாய் இராமகெருடன் சம்பாவையும், கருடன் சம்பாவையும் பரீக்ஷார்த்தமாய் பயிர்செய்து பார்த்ததில் கிடைத்த மாசூலைக்காட்டுகிறது:—

வருஷம். ஏகர்.	சாகுபடி செய்த விஸ்தீர்ணம். ஏகர்.	ராமகெருடன் சம்பா. தானியத்தின் மொத்த மாசூல் (ராத்தல்கள்.)	ராமகெருடன் சம்பா. ஏகருக்கு சராசரி மாசூல் (ராத்தல்கள்.)	கருடன் சம்பா தானியம் பிரதி ஏகருக்கு சராசரி மாசூல் (ராத்தல்கள்.)
1913-14				
1914-15	2·80	6,304¼	2,251¼	2,218
1915-16	2·47½	7,147	2,888	2,808
1916-17	6·50	17,941	2,760	2,056
நாலுவரு	6·25	21,495	3,439	2,712
ஷத்தின் சராசரி மாசூல்.		13,221	2,834	2,440

பாலூர் விவசாயப்பண்ணையை அடிக்கடி வந்துபார்த்து அதில் உண்டாகும் பயிர்களின் விருத்தியை ஜாக்கிறதையாய் கவனித்துக்கொண்டிருந்த கிருஷிகர் இந்த இராமகெருடன் சம்பா நெல்லின் அனுகூலங்களை கவனித்து தங்கள் நிலங்களில் சிறிது விஸ்தீர்ணத்தில் முதலில் பரீக்ஷார்த்தமாய் பயிரிட்டுப்பார்த்ததில் சிலாக்கியமாகவே மாசூல் கொடுத்தது. ஆகையால் இந்த தினுசு நெல்லுக்கு நாளுக்கு நாள் கிராக்கி ஜாஸ்தியாகி அது அனேக இடங்களுக்குப் பரவிற்று. இதனடியில் குறித்திருக்கும் அளவு இராமகெருடன் சம்பா நெல்விதை பாலூர் விவசாயப்பண்ணையிலிருந்து வருஷாவருஷம் விலைக்குப் பட்டுவாடா செய்திருக்கிறது:—

வருஷம்.				டட்டுவாடாவான அளவு.	
1914-15	...	...	...	2,652½	ராத்தல்கள்.
1915-16	...	...	...	12,740	,,
1916-17	...	...	...	6,017	,,
1917-18	...	...	...	9,751	,,

இத்துடன் இந்தத்தினுசு நெல்லை ஆங்காங்கு கிருஷிகர் பயிரிட்டு அவர்களும் அக்கம்பக்கத்திலுள்ள குடியானவர்களுக்கு இத்தினுசைப் பரவச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஜெ. செல்வரங்க ராஜு,
விவசாய டிப்டி டைரெக்டர், IV. சர்க்கில்,
பாளையங்கோட்டை.

நோயினால் பீடிக்கப்பட்ட செடிகளை சோதனைசெய்யப்படுவதற்காக கோயம்புத்தூரிலிருக்கும் கவர்ன்மெண்டு (Mycologist) மைகாலஜிஸ்ட் அவர்களுக்கு தபால் மூர்க்கம் அனுப்புவதற்கு கவனிக்க வேண்டிய விதிகள்.

சோதனைக்காக அனுப்பப்படுகிற செடிகளை நோயின் எல்லா நிலைமையையும் காட்டக்கூடியதாயிருக்கும்படி தெரிந்தெடுக்கப்படவேண்டும் அதாவது நோய்கண்டவுடன் இருக்கப்பட்ட ஸ்திதியையும், பூராவாக நோய் தாக்கப்பட்ட பிறகும், பயிரின் கடைசி நிலைமையையும் காட்டக் கூடியதாயிருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட செடிகளை, மை ஒற்றும் காகிதங்களுக்கு ஊடேவைத்து, பளுவேற்றி ஒவ்வொருநாளும் ஈரமான காகிதங்களை எடுத்துவிட்டு அவைகளுக்கு பதிலாக காய்ந்த கடிதங்களை மாற்றி, இவ்விதமாய் 3 அல்லது 4 நாள் செய்யவேண்டும், பிறகு அவைகளை காய்ந்த மை ஒற்றும் காகிதங்களில் வைத்து, காகித அட்டைகளின்ஊடே வைத்தாவது, பெட்டியிலாவது கட்டி அனுப்பலாம். பெரிய செடிகளை வெயில் காயவைத்து கோணிச்சாக்கில் சுற்றிவிடலாம். சோதனைக்காக அனுப்பவேண்டிய செடிகளை ஈரமாயிருக்கும்போது (காயவைக்காமல்) ஒருபோதும் கட்டி அனுப்பக்கூடாது; ஏனென்றால் அப்படி அனுப்புவதில் செடிகளின்மேல் பூஞ்சணம் படர்ந்துவிடும். அப்போது செடிகளை பரிசோதனைசெய்ய இடஞ்சலாயிருக்கும். சோதனைக்காக அனுப்பும் செடிகளை, மெதிலேடெட் ஸ்பிரிட் (Methylatedspirit) என்னும் சாராயத்திலும், ஆரக் (Arrack) சாராயத்திலும், போட்டு அனுப்பலாம்.

தரமாய்ப் பயிரிடும் குடியானவர்களையும் மேஸ்திரிகளையும் பண்ணையாட்களையும் வேலையில் பழக்குதல்.

விவசாய டிபார்ட்மெண்டார் அங்கங்கே ஏற்படுத்தியிருக்கும் சர்க்கார் பண்ணைகளில் குறிப்பிட்ட எண்ணம் வரையில் தாமே பயிரிடும் குடியானவர்களையும், மேஸ்திரிகளையும், பண்ணையாட்களையும் குறிப்பிட்ட சில விவசாய வேலைகளையும், விவசாயத்திற்கு உதவும் லேசான மெஷின்களையும் உபயோகிக்கவும் பழக்கிவைப்பார்கள் என்பது வெகுவாய் அநேகருக்கு தெரியாதென்று தோற்றுகிறது.

லாபமானது என்று சொல்லத்தகுந்த முறைகளை குடியானவர்கள் மனதில் படும்படி செய்வதற்கு சிறந்தவழி அவன் நிலத்திலேயே அதைச்

செய்து காட்டுவதுதான். இந்தப்பிரகாரமே விவசாய டிபார்ட்மெண்டார் விசேஷமாய் செய்துவந்திருக்கிறார்கள். இனியும் அப்படியேசெய்வார்கள். சிலருக்கு சர்க்கார் பண்ணைகளிலும் வேலை பழக்கித்தருவார்கள்.

நிலச்சுவான்கள் பொறுக்கியெடுத்த சிலபண்ணையாட்களை அனுப்பி அப்படிவேலை பழக்கிவைத்துக்கொள்ள இஷ்டப்படவும் கூடும். பூமிகளில் பாடுபட்டு பண்ணைவேலைகளில் பழக்கமுள்ளவர்களாயும் சர்க்கார் பண்ணையிலிருக்கும் கூலிகளோடு கூலியாய் வேலைசெய்யக்கூடியவர்களாயும் இருப்பவர்களைமட்டுமே வேலை பழக்கச் சேர்த்துக்கொள்ளுவாரகள்.

சர்க்கார் பண்ணைகளிலிருந்து வரும்போது அதை மேல்பார்த்து வரும் மானேஜர், அஸிஸ்டெண்டு மானேஜர் முதலியவர்களுக்கு அடங்கி நடப்பதோடு இட்டவேலைகளை சுறுசுறுப்பாயும் ஒழுங்காயும் செய்துவரவேண்டும். அப்படிச் செய்யாதுபோனால் வேலை பழக ஏற்பட்டகாலம் முடியுமுன்னமேயே பிரின்ஸிபால் துரை அவர்களாவது டிப்டி டைரக்டர் துரை அவர்களாவது போகச்சொல்லிவிடுவார்கள்.

அவர்கள் தங்கள் வழிச்செலவை அவர்களே போட்டுக்கொள்வதோடு குடியிருக்க இடமும் தேடிக்கொள்ளவேண்டும். ஆனால் அவர்கள் செய்யும் வேலைக்கு பாரத்தில் (பண்ணையில்) கூலிகொடுப்பதுபோலவே கூலிகொடுத்துவிடுவார்கள். வேலை பழக்குவதைக்குறித்த விவரம் கீழே கண்டிருக்கிறது:—

இடம்	பழக்குவிக்கும் வேலையின் விவரம்.	கற்றுக்கொடுக்கப் பிடிக்கும் காலம்.
கோயமுத்தூர்.	உழவு; மண்ணைப்பிறட்டும் சிறகுள்ள இரும்புக்கலப்பைகளை தகுந்தபடி உபயோகிக்க.	ஒரு மாசம்—எருதுகளையும் பழக்க அனுப்பலாம்.
	விதைக் கலப்பை (கொருக் கலப்பையால்) விதைக்க.	ஒரு மாசம்—ஆகஸ்டு 15 முதல் செப்டம்பர் 15 வரை.
	வெல்லம் காய்ச்சுதல் ...	ஒரு மாசம்—எப்ரல் அல்லது மே.
	நெல் நாற்றுநட; நாற்றங்கால் தயார்செய்து நாற்றுப்பாவி ஒற்றை நாற்றாய் நடவும்பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்யவும்.	இரண்டு மாசம்—எப்ரல் முதல் ஜூலை வரை.
	ஆண்பிள்ளை ஆட்களோடு அவர்கள் வீட்டுப் பெண்பிள்ளை ஆட்கள் வந்தால் ஒற்றை நாற்று நடவும் தூற்றுகிற மெஷின் வேலையும் பழக்குவார்கள்.	

இடம்	பழக்குவிக்கும் வேலையின் விவரம்.	கற்றுக்கொடுக்கப் பிடிக்கும் காலம்.
பாலூர் (தென் ஆற்காடு ஜில்லா).	(1) நெல் ஒற்றை நாற்று நடுகை. (2) விதை பொறுக்கி எடுத்தல (3) சிந்துக் கலப்பையாலும் மான்சூன் கலப்பையாலும், உழுதல், முக்கோண ஆரம் என்று சொல்லும் முள்ளுப் பலுகால் பலுகடித்தல். (4) கரும்பு நடல் ... (5) விருத்தியான கரும்பு காய்ச்சும் அடுப்பு.	ஒரு வாரம்—ஆகஸ்டு, செப்டம்பர். ஜனவரி, பிப்பரவரிமாசங்களில் ஜூன், ஜுலை மாசங்களிற் ஒரு வாரம். மார்ச்சு மாசம்—இரண்டு வாரம்.
கோயில்பட்டி (திருநெல்வேலி ஜில்லா).	(1) மான்சூன் என்று சொல்லும் இரும்புக் கலப்பையை சரியானபடி பூட்டவும் உழவும் பழக. (2) டிஸ்க்சென்னும் கலப்பையை சரியானபடி பூட்டவும் உழவும். (3) கொர்ருக் கலப்பை விதைப்புக்கேற்ற கருவிகளை உபயோகப்படுத்திப் பழக. (4) மாட்டுக் களைவெட்டியால் களை வெட்ட (அதாவது தந்துவடிக்க).	கோடையில் அதாவது மே, ஜூன், ஜுலை மாசங்களில் இரண்டு வாரம். செப்டம்பர், அக்டோபர் மாசங்களில் ஒரு மாசம்
தளிப்பரம்பா (மலையாளம் ஜில்லா).	கரும்பு ஆலை ஆடி வெல்லம் காய்ச்சும் முறைகளைப் பழக இப்போது ஆலை அடுப்புக்கட்டும் விதத்தையும் பழக்குவார்கள்.	டிசம்பர், ஜனவரி மாசங்களில் இரண்டு வாரம்
காசரகோட்.	எருதுகளால் இழுக்கப்பட்ட கருவிகளைக்கொண்டு தென்னந்தோட்டத்தை பயிராக்குதல்.	ஜனவரியில் ஒரு மாசம்

கோயமுத்தூர் காலேஜில் சேகிருறவர்கள் அந்தக் காலேஜ் பிரின்சிபால் துரையவர்கட்கும், பாலூரில் சேர விரும்புவோர்கள், பரங்கிமலையிலிருக்கும் IV-வது சர்க்கில் விவசாய டிப்டி டைரக்டர் அவர்களுக்கும், கோயில்பட்டியில் சேருபவர்கள் மதுரையிலிருக்கும் IV-வது சர்க்கில் விவசாய டிப்டி டைரக்டர் துரையவர்கட்கும், தளிப்பரம்பர், காசாரகோட்டில் சேர விரும்புவோர்கள், தெல்லிச்சேரியிலிருக்கும் VII-வது சர்க்கில் விவசாய அஸிஸ்டெண்டு டைரக்டர் அவர்கட்கும் மனுச்செய்து

கொள்ளவேண்டும். எப்போது ஆள்களை சேர்க்கமுடியும் என்பதையும் அவர்களுக்கு வேணுமானால் குடியிருக்க இடத்தையும் குறித்து அவர்களுக்கு எழுதினால் எழுதுவார்கள்.

ஜி ஏ. டி. ஸ்டுவர்ட்,
விவசாயடைரெக்டர்.

தென்னாட்டு கரிசல் நிலங்களில் மான்சூன் கலப்பையின் உபயோகம்.

மான்சூன் கலப்பையைப்பற்றிய விவரங்களும் அதன் பிரயோஜனங்களும முன் வெளியிட்டிருக்கும் விவசாய பஞ்சாங்கங்களில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் கோவில்பட்டி சர்க்கார் விவசாயப்பண்ணையில் இதை உபயோகித்துப் பார்த்ததில் இதுவும் நல்ல கலப்பையென்று தெரியவந்தது. கரிசல் பூமிகளில் சொற்ப கிரயத்தில் ஒரு ஜோடி மாடு கொண்டு செவ்வையாய் உழக்கூடிய ஒரு கலப்பை மிகவும் அவசியமாய் இருக்கிறது. மேலும் அருகை பூராவாக சொற்ப செலவில் எவ்வாறு எடுப்பது என்பது இப்பக்கத்திலுள்ள சமுசாரிகளில் அனேகருடைய மனக்கவலை; இப்பொழுது இந்த இரண்டு வேலைகளையும் நன்கு செய்யும் கலப்பை நம்மிடத்தில் ஒன்று இருக்கிறது.

சாதாரணமாக இத்தென்பாகத்து கரிசல் காடுகளில் சமுசாரிகள் கோடைகாலத்தில் 5-அல்லது 6-தடவை தங்கள் பூமிகளை நாட்டுக் கலப்பையால் உழுவது வழக்கம். ஆனால் மான்சூன் கலப்பைகொண்டு இரண்டு உழவு போதுமானது.

நாட்டுக்கலப்பையால் உழும்போது ஆழமாய் உழவேண்டுமானால் சமுசாரிகள் கலப்பையை தங்கள் பலமெல்லாம் கூடி அழுத்திப்பிடிப்பதும் கல்லைக் கலப்பையில்வைத்து கட்டுவதும் வழக்கம். ஆனால் மான்சூன் கலப்பையால் உழும்போது இவ்வாறு செய்யாமல் மிகவும் சுலபமாய் உழலாம். வேலைசெய்பவர் கஷ்டப்படாமல் மேழியைப் பிடித்துக்கொண்டுபோனால் போதுமானது.

எவ்விதமாக அழுத்திப்பிடித்தபோதிலும் நாட்டுக்கலப்பையால் உழும்போது 3 அல்லது 4 அங்குல ஆழத்திற்குமேல் போவது அரிது. மேலும் 5 அல்லது 6 தடவை உழுதபோதிலும் சரியான உழவு ஆகிறது இல்லை.

ஆனால் மான்சூன் கலப்பையோ மண்ணை நன்றாய் புரட்டி விடுவதுமல்லாமல் இடை கொஞ்சமேனுமில்லாமல் முற்றிலும் உழுதுவிடுகிறது. சாதாரணமாய் இக்கலப்பை 6 அங்குலம் முதல் 8 அங்குலம் ஆழம் வரையிலும் உழும். ஆகையால் மான்சூன் கலப்பையைக்கொண்டு உழுவதினால் காலதாமதமில்லாமல் பூர்த்தியானஉழவும் பணச்சிக்கனமும் ஏற்படுகிறது. இதுதான் சமுசாரிகள் முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

நல்ல சமுசாரிகள் தன் நிலங்களில் அருகு இருக்க ஒரு பொழுதும் சகிக்கமாட்டார்கள். எவ்விதத்திலுமாகிலும் அதை எடுத்துவிட முயல்வார்கள் அருகு எடுப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு சாதாரணமாய் ரூ. 40 முதல் ரூ. 60 வரையில் செலவு செய்து வருகிறதைப்பார்த்துவருகிறோம் இவ்வாறு ஏன் பணத்தை வீணாக்கவேண்டும். அருகு எடுப்பதற்கு சுலபமான வழி ஒன்றுண்டு. அதாவது சமுசாரிகள் தங்கள் நிலங்களுக்கு எருவிட்டு சோளகாத்து விதைக்கவேண்டும். இப்படிச்செய்தல், ஆழத்தில் இருக்கும் அருகானது பூமியின்மேலிருக்கும் உச்சத்தை சாப்பிடுவதற்குமேல் நோக்கிவரும் சோளகாத்து அறுவடையானதும் மான்ருன் கலப்பையைக்கொண்டு ஆழமாய் இரண்டு மூன்று தரம் உழுதால் அருகு எடுபட்டுப்போகும். ஆனால் உடனே கூலி ஆள்களைக்கொண்டு அருகைசுத்தமாய் பொருக்கி அப்புறப்படுத்திவிட வேண்டும் இல்லாவிட்டால் திடீரென்று கோடைமழை பெய்தால் அந்த அருகுகள் திரும்பவும் வேர் ஊன்றிக்கொள்ளும்.

N. S குலந்தசாமி பிள்ளை,
விவசாய அஸிஸ்டெண்டு டைரெக்டர்,
மதுரை.

தீர்வை ரத்து.

இதனால் சகல ஜனங்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் தற்காலத்திலிருக்கும் உணவுப்பொருள்களின் பஞ்சத்தை நிவர்த்திக்கும்பொருட்டு புஞ்சை உணவு தானியங்களில் சாகுபடியை விருத்திசெய்யவேண்டியதற்காக 1327 அல்லது 1328-வது பசலிகளில் சாகுபடி செய்யப்படாத தீர்வைப்பட்ட சர்க்கார் தரிசு நிலங்களில் புஞ்சை உணவு தானியங்களை யார் சாகுபடி செய்தபோதிலும் அதற்கு 1329-ம் பசலியில் நிலத்தீர்வை விதிக்கப்படமாட்டாதென்று கவர்மெண்டார் அவர்கள் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

ஜில்லா கெஜட், }
16—7—1919. }

ஜே. ஆர். ஹக்கின்ஸ்,
கலெக்டர்.

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B. A., B. L., & Mr. R. Srinivasa Ayyangar, B. A., for The Agricultural Association, No. 5, Cutchery Road Kumbakonam.